## திராவிடத்தால் வாழ்கிறோம்

1071

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

154



# பொருநை அருங்காட்சியகம்!

## தமிழினத் தொன்மையின் அடையாளம்!

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

“வரலாற்றைத் தெரிந்துகொள்வதும் மீட்டெடுப்பதும் எதற்காக? வெறும் பழம்பெருமையைப் பேசி, அதில் மனநிறைவு அடைவதற்காகவா? இல்லை, நாம் வந்த பாதையைத் தெரிந்துகொண்டு, எதிர்காலத்தில் இன்னும் முற்போக்காக, இன்னும் பரந்த மனப்பான்மையோடு வளர்வதற்கான தேடல் அது” என நெல்லையில் பொருநை அருங்காட்சியகத்தைத் திறந்துவைத்து, தமிழ்நாட்டின் முதலமைச்சர் - திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

‘வரலாற்றை மீட்டெடுப்பது’ என அவர் உரையில் குறிப்பிட்டது வெறும் சொல் அல்ல, செயல் என்பதற்கான அடையாளங்களில் ஒன்றுதான் பொருநை அருங்காட்சியகம். தமிழ்நாட்டின் 3,200 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைப் பறைசாற்றும் வகையில் அமைக்கப்பட்ட இந்த அருங்காட்சியகத்தை, கடந்த ஆண்டு, டிசம்பர் 20-ஆம் தேதி திறந்துவைத்து பார்வையிட்டார் முதலமைச்சர்.

தமிழர்களின் சங்ககால வரலாற்றுச் சான்றுகளை உலகுக்கு அறிவித்துக்கொண்டிருக்கிறது கீழடி அருங்காட்சியகம். கீழடியைவிட தமிழர்களின் பெருமையைச் சொல்லும் சான்றுகள், வேறு இருக்காது என நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை ஆகிய இடங்களில் கிடைத்த ஆதாரங்கள் வரலாற்றையே புரட்டிப்போட்டன. பண்டைய தமிழர்கள் இரும்பை உருக்கும் கலையை அறிந்தவர்கள் என்பதை, சிவகளையில் கிடைத்த இரும்பு வாள்கள், இரும்புப் பொருட்கள் நிரூபித்தன. துறைமுக நகரமாக இருந்த கொற்கை, உலக அளவில் பெரும் வர்த்தக நகரமாக இருந்துள்ளதைச் சான்றுகள் சொல்கின்றன. பல கட்ட ஆய்வுகளுக்குப் பின், தமிழர்கள் இரும்பின் காலத்தில் வாழ்ந்தவர்கள் என, சட்டமன்றத்தில் பெருமையுடன் அறிவித்தார் முதலமைச்சர்.

### பொருநை நாகரிகம்

தாமிரபரணி நதி, பண்டைய காலத்தில் ‘பொருநை’ என அழைக்கப்பட்டது. அதன் கரையில் தோன்றியதே பொருநை நாகரிகம். செழிப்பாக இருந்த பொருநை நதிக்கரை பகுதிகளான சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த ஆயிரக் கணக்கான தொல்லியல் பொருட்களைக் கொண்டு, அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று பெருமையுடன் அறிவித்தார் முதலமைச்சர்.

இதையடுத்து, திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டி கிராமத்தில் அருங்காட்சியகம் அமைக்க, 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டினார். பொதுப்பணித்துறை சார்பில், ரூ.56.60 கோடி மதிப்பீட்டில் 54 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்ட இந்த அருங்காட்சியகத்தை, டிசம்பர் 20-ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

### காட்சிக்கூடங்கள்

இந்த அருங்காட்சியகத்தில், ஆதிச்சநல்லூர் காட்சிக்கூடம் 2, சிவகளை காட்சிக்கூடம் 1, கொற்கை காட்சிக்கூடம் 2, நிர்வாகக் கட்டடம் 1 உள்பட 7 தொகுதிகளாகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூர் கட்டடமானது 16 ஆயிரத்து 486 சதுர அடியில் இரண்டு தளங்களாக அமைக்கப்பட்டுள்ளது. சிவகளை கட்டடமானது 8 ஆயிரத்து 991 சதுர அடியில் இரண்டு தளங்களாக அமைக்கப்பட்டுள்ளது. கொற்கை தொகுதி இரண்டு கட்டடங்களாக 17 ஆயிரத்து 429 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ளது.

கொற்கை காட்சிக்கூடத்தில் 812 பொருட்களும், ஆதிச்சநல்லூர் காட்சிக்கூடத்தில் 1,020 பொருட்களும், சிவகளை காட்சிக்கூடத்தில் 185 பொருட்களும் எனப் பண்டைக்கால முதுமக்கள் தாழி, நாணயம், பானை ஓடுகள், மணிகள், அணிகலன்கள் என ஏறத்தாழ 2,000-க்கும் மேற்பட்ட தொல்லியல் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவின் ‘பீட்டா அனலட்டிக்’ ஆய்வுக்கூடம் அளித்த காலப் பகுப்பாய்வு சோதனைப்படி, இந்தப் பொருட்கள் அனைத்தும் தமிழர்களின் 3,000 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தொன்மையான வரலாற்றுக்குச் சான்றாக உள்ளன.

### போக்குவரத்து வசதி

ஒவ்வொரு கட்டடத்திற்கும் இணைப்புச் சாலை, சிறிய நீர்நிலை, அதன்மீது பாலம், பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வண்ண விளக்குகள், நீரூற்றுகள், திறந்தவெளி திரையரங்கு அமைப்புகள், திறந்தவெளி கூட்டரங்கம் என மக்களைக் கவரும் பல வசதிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. குடிநீர், கழிவறை உள்ளிட்ட வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மூத்த குடி மக்கள் பார்வையிட, பேட்டரியால் இயங்கும் வாகன வசதியும் செய்து தரப் பட்டுள்ளது. நெல்லையில் இருந்து நேரடி போக்குவரத்து வசதிகளும் செய்து தரப் பட்டுள்ளன. திறப்பு விழாவுக்குப் பின்னர், ஒவ்வொரு நாளும் சுமார் 2 ஆயிரம் பேர், இந்த அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டு வருகின்றனர்.










அருங்காட்சியகம் திறப்பு விழா அன்று, பொருநை நாகரிகம் குறித்த பெருமை பேசும் காட்சிப் பதிவை வெளியிட்ட முதலமைச்சர் அவர்கள், “பொருநை தமிழரின் பெருமை, இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு, தெற்கில் இருந்துதான் எழுத வேண்டும் என்கிற கூற்றுக்குச் சான்றாக உள்ளது. இலக்கியம் மட்டுமே சான்றாகக் கொள்ள முடியாது என்றுதான், வரலாற்றுப் பூர்வமாக ஆராய்ச்சி செய்து நிரூபிக்க விரும்புகிறோம். இல்லாத சரஸ்வதி நாகரிகத்தைத் தேடி அலைவோருக்கு, நாம் கண் முன்னே வெளியிடும் ஆய்வுகள் தெரியவில்லை. அதற்காக நாம் விட்டுக்கொடுக்க முடியுமா? இரண்டாயிரம் ஆண்டுக்கால சண்டை இது. விட்டுக்கொடுக்க மாட்டோம். தோற்றுப்போக மாட்டோம்!” என்றார்.

> “இரண்டாயிரம் ஆண்டுக்கால சண்டை இது. விட்டுக்கொடுக்க மாட்டோம். தோற்றுப்போக மாட்டோம்!”

**தமிழரின் பெருமை தரணி எங்கும் சேரட்டும்!**

...சாதனை தொடரும்

## தமிழ்நாட்டின் மாற்றத்தை விவரிக்கும் புதிய நூல் வெளியீட்டு விழா!



பொருளாதார அறிஞரும் தமிழ்நாடு திட்டக்குழுவின் செயல் துணைத்தலைவருமான ஜெயரஞ்சன் எழுதியுள்ள புதிய நூல், ‘Tamil Nadu in Transition’. விவசாயம், தொழில், வாழ்வாதாரம் எனப் பல பிரிவுகளாக 600 பக்கங்களுக்கு மேல் கொண்ட ஆங்கில நூலாக இது உருவாகியுள்ளது. குறிப்பாக, தொட்டி நீர்ப்பாசனம்–ஏரி, கண்மாய் நீர்ப்பாசனம் இந்தியாவின் முந்திரித் தொழிலை தமிழ்நாடு எப்படி மறுசீரமைத்தது, தமிழ்நாட்டில் நான்கு முக்கிய தொழில்களில் ஊதிய நிர்ணயம், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களைப் பற்றிய ஆய்வு, சமூக மாற்றம் – சுகாதாரம் குறித்து செங்கல்பட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வு, வறுமையைப் புரிந்துகொள்வதைப் பற்றிய ஆய்வு, தமிழ்நாட்டின் வாழ்வாதார மதிப்பீட்டு அறிக்கை, உலகமயமாக்கலின் தமிழ்நாட்டுத் தாக்கம், தமிழ்நாட்டுக் குழந்தைகள் பற்றிய ஆய்வு என ஒன்பது முக்கிய ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கி வந்துள்ளது இந்நூல்.

மின்னம்பலம் மற்றும் Basic and Essential Publications இணைந்து, சென்னை சி.ஐ.டி. நகரில் உள்ள கவிக்கோ அரங்கில், இந்நூலின் வெளியீட்டு விழாவை இன்று நடத்துகிறது. மாலை 6.00 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர் உதயச்சந்திரன் ஐ.ஏ.எஸ். நூலை வெளியிட, சென்னை இதழியல் கல்லூரியின் இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் நூலைப் பெற்றுக்கொள்கிறார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் கவிதா ராமு ஐ.ஏ.எஸ்., பேராசிரியர் முரளி சண்முகவேலன், எழுத்தாளர் நிவேதிதா லூயிஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். திராவிட மாடலால் தமிழ்நாடு கண்ட கல்வி – சமூக – பொருளாதார வளர்ச்சியின் பின்னால் நிகழ்த்தப்பட்ட சத்தமில்லாத சாதனைகளை ஆய்வுபூர்வமாக அணுகும் இந்நூல், காலத்தின் தேவை.

## ஃப்ளாஷ்பேக்





ஜி.லோகநாதன்

### என் வாழ்வின் பொன்னாள்!

2015-ஆம் ஆண்டு, புதுச்சேரி அரியாங்குப்பம் சட்டமன்றத் தொகுதி கழகப் பிரதிநிதியாக, மாநில கழக அமைப்பாளரால் பரிந்துரைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதையொட்டி, அண்ணா அறிவாலயத்தில் அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றேன். அந்த நாள், என் வாழ்வின் பொன்னாளாகும்.

– ஜி.லோகநாதன், கிளைச் செயலாளர், சண்முகம் நகர்–அரியாங்குப்பம், புதுச்சேரி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### எந்தத் துறையையும் நிர்வகிப்போம்!

1967-ஆம் ஆண்டு, கழக அரசு பதவி ஏற்றதும், அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட துறை குறித்து, கருத்து தெரிவித்தார் கலைஞர். “எனக்கு பொதுப் பணித்துறை, நாவலருக்கு கல்வித்துறை, மதியழகனுக்கு உணவுத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. எந்தத் துறை ஒதுக்கினாலும், நாங்கள் நிர்வகிப்போம் என்கிற நம்பிக்கை ஏற்படக் காரணம் அண்ணாதுரை. அந்த, ‘துரை’யை நம்பினால், தமிழ்நாடு முன்னேறும்” என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.